NOOLAHAM
FOUNDATION

Jaffna Uthayan News paper Digitization

Noolahamfoundation.org

# உதயன் பத்திரிகைகள் ஆவணப்படுத்தல் ஆண்டறிக்கை
**2021/2022**

| | |
|---|---|
| செயற்றிட்டத் தலைப்பு | உதயன் பத்திரிகைகள் ஆவணப்படுத்தல் |
| செயற்றிட்ட எண் | NF/GP/2020/0015 |
| செயற்றிட்ட இடம் | யாழ்ப்பாணம் |
| செயற்றிட்டக் காலம் | நவம்பர் 2020 - டிசம்பர் 2022 |
| நிறைவேற்றும் அமைப்பு | நூலக நிறுவனம் |
| புரவலர் அமைப்பு | அனோஜன் குணரட்னம் ஜான் கேசியஸ் சுதன், ஃப்ரீடான்ஸ் ஃபெர்டினாண்ட்ஸ் |
| முக்கிய பங்குத்தாரர்கள் | நூலக நிறுவனம், ஆவணச்சேகரிப்பாளர்கள், தன்னார்வலர்கள் |
| செயற்றிட்டச் செலவுகள் | 2020 -2022 - LKR **1,125,690.84** |

செயற்றிட்டச் சுருக்கம்

தமிழ் மொழி பேசும் சமூகங்களினை ஆவணப்படுத்துகையில், அந்த சமூகங்களின் மத்தியில் இருந்து தமிழ் மொழியிலே வெளியாகிய எழுத்துப் பதிவுகளை ஆவணப்படுத்துவது முக்கியத்துவம் பெறுகிறது. எழுத்துப் பதிவுகள் தொடர்பிலே சிந்திக்கையில், பத்திரிகைகளை ஆவணப்படுத்துவது அவசியம். வாசிப்புக் கலாசாரத்திலே, வெவ்வேறுபட்ட சமூகப் பொருளாதாரச் சூழல்களில் இருந்து வரும், மிகவும் அதிகளவான தமிழ் பேசும் மக்களை ஈர்க்கின்ற ஒரு எழுத்துப் பிரதியாக பத்திரிகை அமைகின்றது. எனவே தமிழ் பேசும் சமூகங்களின் வாசிப்புக் கலாசாரத்தினைக் கட்டியமைப்பதிலும், ஒழுங்குபடுத்துவதிலும் பத்திரிகைகளுக்கு என ஒரு அதிமுக்கியத்துவம் வாய்ந்த இடம் இருக்கிறது. அந்த வகையில் நூலக நிறுவனம் தமிழ் பேசும் சமூகங்களில் இருந்து வெளியாகிய, வெளியாகிக் கொண்டிருக்கும் பத்திரிகைகளை ஆவணப்படுத்தும் செயன்முறைகளிலே தன்னை ஈடுபடுத்தி வருகிறது.

உதயன் பத்திரிகை யாழ்ப்பாணத்தில் இருந்து மிகவும் நெருக்கடியான ஒரு காலப்பகுதியிலே வெளியாகியது. வடக்குக் கிழக்கிலே இடம்பெற்ற ஆயுத விடுதலைப் போராட்டத்தின் போது மிகவும் நெருக்கடியான சூழ்நிலைகளைச் சந்தித்து அது வெளியாகியது. இராணுவத்தினராலும், ஆயுதப் போராட்ட இயக்கங்களினாலும் இந்தப் பத்திரிகை பல அச்சுறுத்தல்களையும் எதிர்கொண்டது. அவ்வாறான பத்திரிகை ஆயுதப் போராட்டத்தினையும், அதிலே பங்கு வகித்த சக்திகளினையும், அவற்றின் வரலாற்றினையும் ஆவணப்படுத்துகையில் மிகவும் முக்கியத்துவம் மிக்க பத்திரிகையாக அமைகின்றது.

யாழ்ப்பாணத்தில் நிகழ்ந்த பல்வேறு அரசியல், சமூக, பொருளாதார, கலாசார நிகழ்வுகளைப் பற்றி அறிந்துகொள்வதற்கும் உதயன் பத்திரிகையினை ஆவணப்படுத்துவது முக்கியமாகிறது. யாழ்ப்பாணத்தினதும், வட பிராந்தியத்தின் ஏனைய பகுதிகளிலும் மக்களின் வாழ்க்கை முறை, அவர்களின் சடங்குகள், கலைகள், பண்பாடுகள், இலக்கியங்கள் போன்றனவற்றின் உயிர்ப்புமிக்க வாழ்க்கையினை வெளிக்கொண்டு வந்த ஒரு பத்திரிகையாக உதயன் பத்திரிகை அமைகிறது.

உதயன் பத்திரிகையில் வெளிவரும் விளம்பரங்கள் கூட வட பிராந்தியத்தின் பொருளாதாரத்தினையும், நுகர்வுக் கலாசாரத்தினையும் பற்றி ஆய்வு செய்வோருக்குப் பயன்தரக்கூடியன.

உதயன் பத்திரிகை யாழ்ப்பாணத்தில் இருந்து 1985 ம் ஆண்டில் இருந்து வெளிவரும் ஒரு முக்கிய பத்திரிகை ஆகும். அவர்களின் அனுமதியுடன் 6,425 பத்திரிகைகள் இத் திட்டம் ஆரம்பிப்பதற்கு முன்னர் நூலக நிறுவனத்தால் எண்ணிமப்படுத்தி, பாதுகாத்து, அணுக்கப்படுத்தப்பட்டுள்ளது. இவற்றில் விடுபட்ட 8,119 பத்திரிகைகளை ஆவணப்படுத்துவதற்காக இச்செயற்றிட்டம் ஆரம்பிக்கப்பட்டது. உதயன் பத்திரிகைச் சேகரம் வரலாற்று ஆய்வாளர்களுக்கும் ஆர்வலர்களுக்கும் ஒரு முக்கிய முதல்நிலை உசாத்துணை வளமாகப் (primary reference resource) பயன்படுகிறது.

செயற்றிட்ட இலக்கு

உதயன் பத்திரிகைளை முழுமையாகத் திரட்டி அவற்றை எண்ணிமப்படுத்தலும், திறந்த அணுக்கத்திற்காக வழங்குதலுமே இச்செயற்றிட்டத்தின் அடிப்படையான நோக்கமாகும்.

மொத்த அடைவுகள்

| மாதங்கள் | எண்ணிமப்படுத்தப்பட்ட பக்கங்களின் எண்ணிக்கை | | எண்ணிமப்படுதப்பட்ட பத்திரிகைகளின் எண்ணிக்கை | |
|---|---|---|---|---|
| | **ஆண்டு2021** | **ஆண்டு 2022** | **ஆண்டு2021** | **ஆண்டு2022** |
| தை | 3718 | 6504 | 144 | 261 |
| மாசி | 4650 | 5118 | 200 | 399 |
| பங்குனி | 5222 | 4556 | 135 | 620 |
| சித்திரை | 2846 | 2628 | 100 | 403 |
| வைகாசி | 2846 | 2452 | 22 | 284 |
| ஆனி | 544 | 6758 | 124 | 1194 |
| ஆடி | 2256 | 5243 | 90 | 765 |
| ஆவணி | 4140 | 1172 | 294 | 36 |
| புரட்டாதி | 3408 | 7462 | 129 | 236 |
| ஐப்பசி | 4216 | 6658 | 140 | 202 |
| கார்த்திகை | 1288 | 4154 | 57 | 171 |
| மார்கழி | 6222 | | 275 | |
| மொத்தம் | **41832** | **52705** | **4410** | **4571** |

https://tinyurl.com/4t6mw9rr

நிதி செலவீனம்
2020 - 2022 - LKR 978,920.84

கற்றல்களும் பரிந்துரைகளும்

- செயற்றிட்ட நோக்கத்தின் அடிப்படையில் விடுபட்ட 8,119 உதயன் பத்திரிகைகளை ஆவணப்படுத்தப்பட்டன.
- இச் செயற்றிட்டத்தின் இலக்கு பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.
- இத் திட்டத்தினை எடுத்துக்காட்டாகக் கொண்டு எதிர்காலத்தில் ஏனைய திட்டங்களை செயற்படுத்த முயற்சிக்கவும்

முடிவுரை

- உதயன் பத்திரிகை ஆவணப்படுத்தல் செயற்றிட்ட இலக்கு பூர்த்தி செய்யப்பட்டதற்கான தரவு மற்றும் தகவல் வழங்கப்படும் அறிக்கையாக உள்ளது.

பின்னிணைப்புக்கள்
உதயன் பத்திரிகைகள் ஆவணப்படுத்தல்